1970 மார்ச் 2]

யில் வழங்கவேண்டுமென்று கேட்டார்கள். அதை அரசாங்கம் அனுமதித்தது. நம்முடைய உயர்நீதிமன்றம், அப்படி வழங்கு கின்றபொழுதுகூட, வழங்கக்கூடாது என்று சொல்லவில்லை, வழங் கப்படும்பொழுது அவர்களுக்கு எந்த அளவுக்கு உபயோகத்திற்குத் தேவை என்று சான்றிதழ் பெற்று வழங்குங்கள் என்று யோசனை சொன்னார்கள். அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் தங்கம் கண்டுபிடிப்பு

*163 வினா.—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழகத்தில் தங்கம் (Gold) கிடைப்பதுபற்றி இந்திய கனி வளத்துறையினர் ஆய்வு செய்கின்றனரா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தங்கம் கிடைக்கக்கூடிய பகுதி என்று நீண்ட நாளாக அறியப்பட்டு வந்த நீலகிரியிலுள்ள வயநாடுப்பகுதியில், இந்திய கனிவள ஆராய்ச்சித்துறை, நிலத்தை அகழ்ந்து பார்த்துள்ளது. இதன் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. கீழ்க்கண்ட பகுதி களில் இந்தியக் கனிவள ஆராய்ச்சித்துறை தொடக்க ஆய்வுகள் நடத்தியுள்ளது :—

(1) கோத்தகிரிக்கு 5 கிலோ மீட்டர் தென்மேற்கிலுள்ள ஆடுதுறை:

இந்தப்பகுதியில் கிடைக்கக்கூடிய தங்கத்தின் உலோக மதிப்பு அதிகமாயிருப்பதால், இப்பகுதியில் மேற்கொண்டு ஆய்வுகள் நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது.

(2) தேவலூர்—பந்தலூர்ப்பகுதி:

இங்கு உலோக மதிப்பீடு சராசரி 2 (Dwt Ton) ஆகும் ஆனால் சில நேரங்களில், 4 (Dwt Ton) மதிப்பீடு தருகின்ற சில குவியல் களையும் இங்கு காணமுடிகிறது. இந்தத் தங்கமூலங்களைச் சிக்கன மான பொருளாதார அடிப்படையில் தோண்டியெடுப்பது, சிறு சிறு குவியல்களை எடுப்பதற்கான வாய்ப்பினைப் பெருமளவில் சார்ந்தி ருக்கின்றது. இந்தியக் கனிவவ ஆராய்ச்சித்துறை இப்பகுதியில் மேற்கொண்டு பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

(3) கோபிச்செட்டிப்பாளையம் வட்டத்தைச் சேர்ந்த மோடிக்கம், பென்சிமலை, இம்பிக்கொம்பை என்னும் பகுதிகளும், கோயம்புத் தூர் மாவட்டத்தில் சிங்கிலியன் கோம்பை, இசுவாணி முத்துப் பாளையம் என்னும் பகுதிகளும் :

இங்கு கிடைக்கக்கூடிய உலோகத்தின் உலோக மதிப்பீடு மிகவும் குறைவாக இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. உறுதி யான மூலப் பொருள் பரப்புகள் எதையும் நேரடியாகக் காண முடியவில்லை.

திரு. பெ. மலேச்சாமி: தலைவரவர்களே, வேறு தென் மாவட்டங் களில் உள்ள மலைத் தொடர்களில் தங்கம் கிடைக்கிறதா என்பது பற்றி ஆய்வு செய்ய இந்தக் குழு விரும்புகிறதா? அதுபற்றி நமது அரசு மேலும் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதைப்பற்றிக் குறிப்பு இல்லை.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவரவர்களே, இந்தத் தங்கத்தை எடுப்பதற்கு இவ்வளவு செலவு ஏற்படுகின்ற காலத்திலே, நம்மு டைய தமிழ்நாட்டில் அந்தக் காலத்தில் சித்தர்கள் செம்பைத் தங்கமாக மாற்றியதாக, ஏட்டிலே இருப்பதாக, தஞ்சாவூர் சரஸ்வதி மகாலில் இருப்பதாகக் கேள்விப்பட்டோம். அதைப் பற்றி அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து, இருக்கும் செம்பைத் தங்கமாக மாற்றி இந்த நாட்டை வளப்படுத்த செயல்திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சித்தர்கள் பின்பற்றிய முறையைப்பற்றி இலக்கியங்களில் ஆராய்ச்சி செய்தார்கள், நிபுணர்களும் ஆராய்ச்சியைத் தொடர்ந்து வருகிறார்கள்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் தங்கம் மட்டுமல்லாமல், பிற கனிவளங்களும் கிடைப்பதாகச் சொல்லப்படு கிறதே, வேறு என்னென்ன பொருள்கள், எங்கெங்கு இருக்கின்றன என்பதைக் கண்டு பிடிக்க தமிழக அரசு தனி ஆய்வுக்குழுவை ஏற்படுத்திப் பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுதே நம்முடைய தொழில்துறையில் ஒரு பகுதியில் ஆய்வு செய்யும் குழு வேலை செய்து வருகிறது. நாடு முழுவதும் எங்கெங்கு இப்படிப்பட்ட வாய்ப்புக்கூறுகள் தென்படுகின்றனவோ அங்கெல்லாம் சென்று ஆராய்ந்து வருகிறார்கள்.

அவினாசி பாசனத்திட்டம்

***164 வினா.—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி பாசனத்திட்டம் பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது எடுத்துக் கொள் ளப்படும்?

(உ) அத்திட்டத்தின் மூலம் எவ்வளவு ஏக்கர் பாசனவசதி பெறும்?